திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டிலே இருக்கின்றது போல், இந்த மீனள ஆராய்ச்சி நிலையத்தை மண்டபத்தில் விரிவாக்கம் செய்ய அரசு மீண்டும், பரிசீலனை செய்ய முயலுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையிருப்பின் துறை பரிசீலித்து ஆவன செய்யும் என்று கூறுகிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபத்தில் இருக்கின்ற ஆராய்ச்சி நிலையம், மத்திய அரசால் நிறுவப்பட்ட 'சென்ட்ரல் மெரின் சென்டர்', அதைத் தவிர்த்து, மாநில அரசு நடத்துகிறதா? அல்லது அரசு நடத்துவதற்கு முற்படுவார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபத்தில் மாநில அரசின் சார்பிலே ஒரு ஆய்வகம் இருக்கிறது. மத்திய அரசின் சார்பிலும் அங்கு ஒரு ஆய்வகம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபத்திலே பெரும்பாலும், கடற்கரைப் பகுதிகள் அதிசமான அளவில் இருக்கின்றன. அங்கே இரால் மீன்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. எனவே தமிழக அரசு மீண்டும் பரிசீலனை செய்து, ஒரு பெரிய ஆய்வுக்கூடம் ஏற்படுத்துவதற்காக முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: அரசு பரிசீலிக்கும்.

ஆறுகாட்டுத் துறையில் மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்தும் திட்டம்.

426— (*வினா எண். 20339) திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் ஆறுகாட்டுத் துறையில் மீன்பிடித்துறைமுகம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. கலைமணி: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள். முடிவுற்றன.